www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - 2025

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I. அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8 x 1 = 8

1. மரம் வளர்த்தால் _______ பெறலாம்
அ) மாற்றி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. திருநெல்வேலி _______ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
அ) காவிரி ஆ) வைகை இ) தென்பெண்ணை ஈ) தாமிரபரணி

3. "இடர் ஆழி நீங்குகவே" - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் _______
அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

4. உலகம் உண்ண உண்: உடுத்தஉடுப்பாய் என்று கூறியவர் _______
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

**ஆ) பொருத்துக:-**

5. நாற்று - பறித்தல்
6. நீர் - அறுத்தல்
7. கதிர் - நடுதல்
8. களை - பாய்ச்சுதல்

**II. ஏதேனும் ஐந்தனுக்கு ஓரிரு சொற்களில் விடையளி.** 5 x 2 = 10

9. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
10. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
11. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
12. பொய்கையாழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?
13. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?
14. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
15. உவமை அணிக்கும் எடுத்துகாட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி.** 3 x 4 = 12

16. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
17. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
18. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
19. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
20. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?

CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



IV. அடிமாறாமல் எழுதுக. 4 + 2 = 6

21. 'மாரியொன்று' ----------- எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை எழுதுக.

22. 'உறுபசியும்' ------------ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

V. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 8 x 1 = 8

23. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக:

அப்துல் கலாமின் புகழ் ______ உலகெங்கும் பரவியது.

(குன்றின் மேலிட்ட விளக்கு போல / குடத்துள் இட்ட விளக்கு போல)

24. கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயரிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

பட்டுக்கோட்டை - ______

25. கலைச்சொல் எழுதுக.

Harvest

26. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.

நெல்லையப்பர் கோவில் ______ உள்ளது?

27. பொருள் கூறுக.

தகளி -

28. பிரித்து எழுதுக.

ஞானச்சுடர் -

29. சேர்த்து எழுதுக.

மாரி + ஒன்று

30. உருவகமாக மாற்று

மலர் முகம்

VI. பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக. 1 x 6 = 6

31. 'என்னைக் கவர்ந்த நூல்'

(அல்லது)

'ஒற்றுமையே உயர்வு'

******

Padasalai

CamScanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com